# கவிமுளரி

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

கால்கோள் : 2023

25 ஜனவரி 2024



வெளியிடுவோர்:

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்

பேத்தாழை

முளரி 2 இதழ் 1

# கவிமுளரி®

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

ISSN 3021-6680

காலக்கோள் : 2023

Kavi Mulari Magazine



**வெளியிடுவோர் :**

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்,
பேத்தாழை, வாழைச்சேனை.

**பதிவு இல:** EP/CUL/BAT/VAL/03/69/2023

**இதழாசிரியர் :**

ஓவியர் மரகதம் பிரகாஷ்

**இணையாசிரியர் :**

கவிஞர், ஆசிரியர் திருமதி.விஜிதா முருகவேள்

**ஆசிரியர் குழு :**

கவிஞர் நவநிதன்
பிள்ளைக்கவி பிரசாந்
தமிழூராள் அனுஷ்திக்கா
தமிழ்மகள் அனுசதுர்த்திக்கா
கவிஞர், இளஞ்சைவப்புலவர் சிவநந்தினி
கவிஞர், இளஞ்சைவப்புலவர் ஜிதர்சினி
கவிஞர் யேசுசகாயம்

**செவ்விதாக்குநர் :**

கவிஞர், இளஞ்சைவப்புலவர் த.கி.ஷர்மிதன்

**அட்டை வடிவமைப்பு :**

கவிஞர், இளஞ்சைவப்புலவர் த.கி.ஷர்மிதன்

**ஆலோசகர்கள் :**

எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாசன்
கலாநிதி மணிக்கூகவி நஸீரா எஸ் ஆப்தீன்
கவிஞர், கலாபூசணம் முத்துமாதவன்
எழுத்தாளர், கலாபூசணம் மெத்தியேஸ்


**புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க வேண்டியவை :**

- கவிதைகள் மட்டுமே அனுப்பலாம்.
- ஒருங்குறியில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- படைப்பாளர் படைப்பின் கீழ் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் முகவரியையும் இட்டு அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்தல் அவசியம்.
- புகைப்படம் இணைத்து அனுப்பலாம். (நாகரிகமானதாக இருந்தால் மட்டுமே இணைக்கப்படும்)
- ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பலாம்.
- ஆக்கங்கள் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரிக் கப்படும்.
- மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களே இதழுக்கு ஏற்கப்படும்.

.........................................

ஆக்கங்களை அனுப்ப

editor2023kavimulari@gmail.com

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பாவர். இதழாசிரியர் பொறுப்பல்ல.
ஆக்கங்களைச் செவ்விதாக்கம் செய்வதற்கு ஆசிரியர் குழுவிற்கு உரிமையுண்டு.

"எழுதுகோல் புரட்சி
எங்ஙனும் எழும்பட்டும்
விழுதென விடுதலை
சமூகத்தில் நிலைக்கட்டும்"

**நற்கவிகளுக்கு**
**வணக்கம்,**

வாழைச்சேனை பேத்தாழையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முயற்சியாகக் 'கவிமுளரி' எனும் கவிதைசார் மின்னிதழ் வெளிவருகிறது.

பிரதேச கவிஞர்களுக்குக் களம் கொடுப்பதும் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்குக் கரம் கொடுப்பதும் எமது பிரதான அவா.

அதன்வழியில்,
கன்னி இதழ் வெளிவந்தது. அதற்கு நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு மேலான நன்றி. தொடர்ந்தும் ஆதரவளிப்பீர்கள் என நம்புகின்றோம்.

இதழில் பங்குபெறும்
கவிஞர்கள் யாவர்க்கும்
வாழ்த்துகள்.

சிலரது கவிதைகள் இடம்பெறாமல் போயிருக்கலாம். அவர்களது கவிதைகள் தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளிவரும்.

தொடர்ந்தும் உங்கள்
பேராதரவை வேண்டும்,




உங்கள்,
-இதழாசிரியர்

*2024.01.25*

# கவிமுளரியில் வாசம் வீசும் கவித்தாதுக்கள்

- கவிஞர் ஜிவிதரன்
- கவிஞர் கிறிஸ்டீபா குலசேகரம்
- கவிஞர் வி.அபிவர்ணா
- கவிஞர் மு.முபாரக்
- கவிஞர் வாழையூர் நி.நிறோஜினி
- கவிஞர் பரமதயாளன் மதுஷன்
- கவிஞர் இரா.நிதன்
- கவிஞர் பிள்ளைக்கவி பிரசாந்
- கவிஞர் கவித்தோழி சிவநந்தினி
- கவிஞர் முஹம்மது அர்ஷத்
- கவிஞர் கு.கமல்
- கவிஞர் சத்யச்சுடர் சத்யா
- கவிஞர் இசைப்பிரியன் கபிலன்
- கவிஞர் ச.சத்தியபானு
- கவிஞர் பிரநீதா நந்தகோபால்
- கவிஞர் திருமதி ஓசாநிதி சந்திரமேகன்
- கவிஞர் அலெக்ஸ் பரந்தாமன்
- கவிஞர் வளர்கவி வாழையூர் அபி
- கவிஞர் ரவிகிருஷ்ணா
- கவிஞர் தமிழ்மகள் சதுர்த்தி





# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே (1)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்குங் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (உ)

– மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை

# கூண்டுக்கிளி

-கவிஞர் ஜிவிதரன்
வாழைச்சேனை.



வைகறைப் பொழுதில்
வண்ணங்கள் பல காட்டிக்
காலங்கள் பல செய்து
பறக்க வேண்டிய பச்சைக்கிளி – அது!

கயவரின் கோரப் பிடியில்
இரும்புக்கரத்தின் அனுங்குப் பிடியில்
இலக்குகளைத் தொலைத்த கிளியாக
இயலாமை அற்று நிற்கிறது

அடிமைத்தனத்தின் பகுத்தறிவும்
சுதந்திரத்தின் எதிர்பார்ப்பும்
கூண்டின் கதவுடைக்கப்
பங்களித்தன கிளிக்கு

இறகுகள் வெட்டப்பட்ட கிளி
பறக்கிறது..! பறக்கிறது..!
பின் பதறுகிறது
தன்னிலை உணர்ந்து மௌனிக்கிறது

பழுதான பழம், காய்கள்
மீண்டும் உணவாகின்றன
இனிப் பேசினாலும் பேசாது
போலும்
அந்தக் கிளி.

# விவசாயி

-கிறிஸ்டீபா குலசேகரம்
ஐயங்கேணி, செங்கலடி.

விதையின் தன்மையைத்
தீர்க்கமாய்ச் சொல்பவன்
விண்மழை நம்பியே
மண்ணிலே வாழ்பவன்

தெய்வமாய் நினைத்திடும்
விளை நிலமதனிலே
பாதணி அகற்றியே
பாதங்கள் பதிப்பவன்

கதிரவன் சுட்டெரிக்க
பாதங்கள் பரிதவிக்க
கலப்பையும் கையுமாய்
வரம்பிலே நடை போடும்
வீரமும் என்றுமே
வீழ்ந்தெங்கும் போகாதே

வித வித ருசியுடன்
வேண்டிய கறியுடன்
அறுசுவை அன்னமும்
ருசித்திடும் மானிடா

விதையுடன் வியர்வையை
சிந்தியே விதைத்திடும்
விவசாயி உழைப்பினை
நினைத்திட மறக்கிறாய்.




# தெரிவதேயில்லை

-வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.

நிதானமாக வந்து நிற்கும் புகைவண்டியிலிருந்து
அவசரமாக நிரம்பி இறங்கும்
பயணிகள்..

செயலி உபயத்தில் ஏற்றிக்கொள்ள காத்திருக்கும்
குளிர்சாதன வாகனங்கள்..

எதிர்பார்ப்பு நிரப்பிப் பேரம் பேசாத
வாடிக்கையாளர்களுக்காய்
மூன்று சக்கர வாகனங்கள்..



விலை உயர்ந்த உணவகங்களும்
துரித உணவுக் கடைகளும்
சாமான்கள் தூக்க மனிதர்களும்
சரியாகக் கிடைக்கிறது

பெரும்பாலும்
அன்றாடம் வயிறு வளர்க்க
எதிர்பார்ப்பில் பூத்திருக்கும்

பூக்கள் விற்கும் பாட்டி...
புத்தகம் விற்கும் சிறுமி...
காய்கறிகள் நிரப்பிய தள்ளுவண்டி...
எளிய மனிதர்களின் சிறிய உருவம்...
மட்டும்
கண்களில் தெரிவதேயில்லை

# முபாரக் கவிதை

-மு.முபாரக்
தமிழ்நாடு.



புரியாத மொழியை
புரிய வைக்கும்
குழந்தையின் புன்னகை,
தெரியாத ஊரின்
பாதையைக் காட்டும்
கடந்து போன நிலவின் வெளிச்சம்,
அச்சமூட்டும் இருளில்
ஆறுதலாகப் பாடித்திரியும் வானம்பாடிகள்,
கொஞ்சமும் அச்சமில்லாமல் காட்டெருமையின்
தலையில் கம்பீரமாய்க் காட்சிதரும் தும்பி,
இடைவெளியில்லாமல்
நட்சத்திர திரைப்படத்தை
காட்டும் வானம்,
பிடித்திருக்கிறதோ பிடிக்கவில்லையோ
மேகத்தை விலக்கிப் பார்க்கிறது காற்று!

# பனைமரம்

-வாழையூர் நி.நிறோஜினி

பனை என்பது மரமல்ல
எம் இனத்தின் அடையாளம்..
வேர் முதல் நுனி வரை
குறைவில்லா வளங்களை
அள்ளிக்கொடுக்கும் கற்பகத்தரு..!

வேளாளர்களின் அரண்
இம் பனைகள் அல்லவா!
பல்லாயிர மக்களுக்கு துணை இது...
இது வழங்கும் ஈகைக்கு
இணை எது..?




பனையின் சுவையான பதநீர்...
மருந்தையும் தன்னகம்
கொண்ட கரும்பனை...
பல பயன்களை அள்ளிக்கொடுக்கும் பனை
கவனிப்பாரற்றுக் கிடக்க...
பயனற்ற செடிகளை வளர்த்து
பராமரிப்பதன் காரணம்
என்னவோ..?

புயல் மழைக்கு அசையாது நின்று
மழைநீரை நிலத்தடி நீராக
சேமிக்கும் நெடும்பனை
அதிசிறந்ததே..!
உன் பெருமைகளை
என்றும் மறவோம்..!


# வண்ணத் தீ பூச்சி

-பரமதயாளன் மதுஷன்
இருதயபுரம்,மட்டக்களப்பு.



பட்டொழியும் பதுமைமிகு மலரிலே
பௌவியமாய் அமர்ந்துண்ணும்
பகட்டில்லா
வண்ணமிகு வண்ணத்து பூச்சியை
எண்ணிலோ எழுத்திலோ
எழுத நான் விளைவேனோ

காற்றிலும் கையிலும்
அல்லற்படும் அவதியை
அதனோடு நானிணைந்து
அங்குமிங்கும் உடன் பறந்து
அசதியில் திறன் மறந்து
துயரினில் விழி கிளர்ந்து
கண்ணீர் மைகொண்டு காகிதத்தில்
நான் வரைந்தேனே!



# அவள்...

-இரா.நிதன்

என்னை மட்டுமில்லை
என்போன்று
அவளை மட்டுமே
நேசித்து வாழும்
அத்தனை உயிர்களுக்கும்
நாடியாகிப் போனாள்
கலைகளை
தன்னுள்ளே ஒழித்துவைத்து
காந்தம் போலிழுக்கும்
கற்பனைக்கும் எட்டாத
புதுரசனை தான்
அவள்...

நாணிப் போவதிலும்
நன்மை செய்வதிலும்
நதியாய் காற்றாய்
நான் சுவாசிக்கும்
மூச்சாகவும்
மாறிப் போகிறாள்...

அவளை வர்ணிக்காது
யாரும் சென்றதில்லை
எப்போதும் எந்நேரமும்
சுவைக்க சுவைக்க
சுறுசுறுப்பை
கொடுத்துக் கொண்டே
இருப்பாள்...

பிறப்பில் இருந்து
எனக்கும் அவளுக்குமான
பந்தம் தொடங்கிவிட்டது
வயது வந்து
பதின்மூன்று வயதிலிருந்து
காதலிக்க ஆரம்பித்தேன்
இன்று வரை
காதலித்துக்
கொண்டுதான்
இருக்கின்றேன்
காதல் துளியும்
குறையவில்லை
எங்கள் இருவரின்
காதலின் அன்புக்கு
கவிக்குழந்தை ஒன்றும்
கரங்களில் சாட்சிக்கு...

எழுத வைத்தாள்
அவளை மட்டும்தான்
அதிலே எதுகை
மோனை என்பாள்
அலங்கரிக்க
அணிகளையும்
தானே
அள்ளியும் கொடுப்பாள்
கிள்ளியெறிந்து விட
அவளொன்றும்
தளிரில்லை
தன்மான விதை...

# அவள்...

பல கவிஞர்களை
உலகுக்குத் தந்தாள்
பாரதி கம்பன்
வள்ளுவன் இளங்கோ
என்ற
பெரும் வாசகம்
குடிகொள்ளவும்
வழிகளைக் கொடுத்தாள்
வெண்பா குறுந்தொகை
எட்டுத்தொகை பத்துப்பாட்டு
என்று
சங்கம் தொட்டும்
சாதனையாக நின்றாள்...

ஆக்குவதில்
அவள்போல் யாரும்
நான் கண்டதில்லை
அலங்காரம் இல்லாமலும்
அவளின் அழகுக்கு
குறையேதும் வந்ததில்லை

அவளை விரும்பாத
மனமும் உண்டோ..?
மாற்றத்தைத் தந்த
மங்கையவள்
மாறாத மனங்களையும்
மாற்ற வைக்கும்
பேரொளியவள்
அவளை மணந்ததால்
நானும்
பாக்கியசாலி தான்...

உடலில்லை அவளுக்கு
ஆனால்,
உருவம் கொடுக்காதவர்
யாரும் இங்கில்லை
அவள் வேறுயாருமில்லை
நாம் மூச்சென்று
சுவாசிக்கும்
எந்தன் தமிழெனும்
அழகிய
வெண்பா
தான் அவள்...



# மாற்றம்

-பிள்ளைக்கவி பிரசாந்
கிண்ணையூர்.



குழவியாய்ப் பிறந்து
கூனுறும் வாழ்வியல்
சூடும் பெயர்..?

கல்வியால் உயர்ந்து
கனத்துடன் சிறக்கும்
காலத்தின் பெயர்..?

துன்பியல் ருசித்து
தூரநோக்கு காணும்
தொலைவின் பெயர்..?

முயற்சியில் துவண்று
முளைத்திடக் கேட்கும்
முன்னேற்றப் பெயர்..?

அடிமையில் இருந்து
அடியேற்ற ஒலிக்கும்
அதிசயப் பெயர்..?

வரலாறு தேடி
வாழ்க்கையை உயர்த்தும்
வளத்தின் பெயர்..?

மாற்றம் ஒன்றே மாறாது என்று
மாற்றிமாற்றி
நம்மில் நிலைகொள்ளும் பெயர்...
'மாற்றம்' எனும் மாபெயர்.

# தேடல்...

-கவித்தோழி சிவநந்தினி
கண்ணகிபுரம்.



நான்,
தினந்தோறும் கனவுகளை
கண்டுகொண்டுதான்
இருக்கிறேன்!

கனவுகள் என்றாவது- நினைவாக
மாட்டாதா?
நிஜங்களின் வெளிச்சத்தில்-நானும்
ஒரு நிழலாக இருப்பது
மறைந்து போகாதா என்று!

எப்படியோ ஓர் நாள் அந்த நிழலுக்கும்
உருவம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்
பயணித்துக் கொண்டிருக்கிறேன்!

தேடல்களின் கணிப்புக்களில் ஏதோ ஒன்றை
தேடிக்கொண்டுதான் இருக்கிறேன்!
நான் தேடுகின்ற ஒவ்வொன்றும் - என்
தேடலுக்குள்ளே புதைந்து கிடக்கின்றன!

அதை மீட்டித் திருப்பி எடுக்க
முயற்சிக்கையில்
என் தேடலின் ஆழமும் கூடிக்கொண்டே
செல்கிறது..!

# 'கவிதை' நான் போற்றும் மனைவி

-முஹம்மது அர்ஷத்
புத்தளம்.



எங்கேயோ பிறந்தவள்
– எனக்காக வளர்ந்தவள்
உறவாட வந்தவள்
– என் உயிரோடு கலந்தவள்
கற்போடு இருந்தவள்
– என்னைக் கணவனாக ஏற்றவள்
பொற்குணத்தோடு புகுந்தவள்
– என்னைப் புலவனாக மாற்றியவள்
அறிவோடு நடப்பவள்
– கொஞ்சம் அதட்டியும் பேசுபவள்
பணிவோடு பார்ப்பவள்
– எனக்காகப் பரிந்துரையும் செய்பவள்
என் உள்ளத்தைத் தொட்டவள்
– சில குழந்தையை வரமாகப் பெற்றவள்
கடமையைச் செய்வதில் வல்லவள்
– காதலைக் கண்களால் சொல்பவள்
குழந்தைகளை அன்பால் வெல்பவள்
– குறையேதும் சொல்லாத நன்மகள்
இறைவன் பரிசாகத் தந்தவள்
– என் வாழ்வில் மணமகள்
நான் போற்றும் மனைவி
– என்றுமே எனக்குச் செம்மகள்.

# கவித்துளிகள்

## அவனிட்ட முத்தம்..

காமம் இல்லாக் காதலோடு
கண்ணியமாய் மெல்லிடை எடுத்தணைத்து
செவ்விதழ் கடந்து மெல்ல
சேர்ந்தவன் நெற்றியில் இட்டுவந்த
முதல் முத்தம் கூறியதே
முதலும் முடிவும் உன்னோடுதானென்று.

- கு.கமல்
முறையூர்ப்பபுரம்.

## என்னவன்

கல் தூசியிலே உனை பிசைந்து காற்றாய் உனக்கு உயிர் தொடுத்து
கர்ப்பத்தின் கருவிலே உனைக் கொடுத்து
கன்னியின் கலையை நீ கலைத்து
மண்ணின் மணி இரத்தினமாய் நீ மின்ன
மன்னவன் அவன் உனை மாற்றினானே
மன்னவன் அவன் என்னவன் என்பதை நீ அறிய மாட்டாயோ?
அறிய நினைத்தாலும் அறிய முடியாத அளவில்லாச் சிகரம் அவன்;
அவனே என் அன்பன் இறைவன்.

-சத்யச்சுடர் சத்யா
முறாவோடை.

# உன் நினைவுகளில் என் இராப்பொழுது

-இசைப்பிரியன் கபிலன்
கல்லடி, நாவற்குடா.



அழகிய ஒரு கவிதை எழுதென்றாள்
எழுதி தந்தேன் அவள் பெயரை..!
சிறு புன்னகையோடு
"பழைய பஞ்சாங்கம்" என்றாள்

இருந்தாலும்,
அவள் மனதில் இனம்புரியாத ஏக்கம்..!
அவளது பெயரில் ஒவ்வொரு எழுத்திலும்
ஓராயிரம் கவிகள் ஒழிந்துள்ளதை
ஏனோ அவள் அறியவில்லை..!

இராத்திரிக் கானங்களில்
இளையராஜாவின் மெல்லிசைக் கீறல்கள்
அவளது நினைவுகளைத் தட்டி யெழுப்புகின்றன

அவளது சிறுபுன்னகைக்காக...
வாடும் மலரும் தேயும் நிலவும் காத்திருக்கையில்...
என்னவளுக்காக நான் காத்திருக்க மாட்டேனோ..!

என் இராப்பொழுது தான் கடக்கிறதே தவிர
விடியல் வந்தபாடில்லை
விடிந்தும் விடியாத பொழுதில்
தேடுகிறேன் அவள் நினைவுகளை.

# இயற்கை

-ச. சத்தியபானு
சென்னை.

ஒதுங்கிய குப்பைகளை
ஓரிடத்தில் குவித்தது
குப்பை வண்டி

தேங்கிய நீரைத் தேவையின்றி
வாரி இறைத்து விட்டதாக
நினைத்துத் திரும்பப்பெற்றது வானம்

நீரைச் சுழற்றி
மின்சாரமாய் மாற்றி
கொடுத்தது மின் வாரியம்

சாய்ந்த மரங்களை
சதுரமாய் நறுக்கி
உட்கார மேசை
செய்தது இயந்திரம்

சாலையில் இருந்த
மேடுபள்ளங்களை
நிரப்பியது மணல்

உறவினர் போல்
பால் பாக்கியை
நாளை பெற்று கொள்கிறேன்
என்றார் கடைக்காரர்

இயல்பு நிலைக்கு
திரும்பிய நகரங்களென
தெளிவாகப் போட்டிருந்தது செய்தித்தாளில்

இத்தனையும் செய்த
மழையை வேண்டுவார்
யாருமில்லை...

இவைகளுக்கு இடையில்
குழந்தையாய்
மழையை ரசித்தபடி இருக்கிறது
இயற்கை.

# பெண்களும் பெண்ணாதிக்கமும்

-பிரநீதா நந்தகோபால்
கேணியூர்.

எதைப் பங்கிட்டாலும்
அண்ணனுக்கு என்று சற்று அதிகமாக எடுத்துவைக்கும்
அம்மாக்களின் பாலினப் பாகுபாட்டிலும்...

பதினெட்டைத் தொட்டதும்
"கல்யாண வயதான பிறகும் பொட்டப் பிள்ளைக்கு
எதுக்கு படிப்பு" என்ற
பாட்டியரின் நச்சரிப்பிலும்...

ஆண் நண்பர்கள் வீட்டிற்கு வருகையில்
எதிர்வீட்டு மாமியின் தலையசைத்தலுக்கு கண்ணைக் காட்டும்
பக்கத்து வீட்டு அக்காமாரின்
பகட்டான நமட்டுச் சிரிப்பிலும்...

"ஆம்பிளை எண்டா அப்படித்தான்
பொம்பிளைதான் அடங்கிப் போகணும்" எனும்
அத்தையரின் அதட்டலிலும்...

தன்னை விட அதிக சீர் கொண்டுவராததால்
வாயைச் சுழித்தபடி திரியும் மச்சினியின்
மக்கிய கேலிப் பார்வையிலும்...

ஒவ்வொரு ஆடைக்கும் விதம் விதமாய்க்
குறை கூறும் முச்சந்தி சித்தியரின்
முழுப்புறணிப் பேச்சிலும்...


சிக்கிக் கொண்டு தவிக்கின்றன
அவளின் பெண் விடுதலைச் சிந்தனைகள்..!

இன்று ஆண்கள் திருந்திவிட்டாலும்
இன்னும் அதிலிருந்து வெளிவர
பெண்கள் தயாராக இல்லை..?

எவ்வளவு காலத்திற்குத்தான்
ஆடவர் மீது பழி சுமத்துவது..?

ஒருவகையில் இந்த பெண்கள்கூட
சமவுரிமை பேசும் சர்வாதிகாரிகள்தான்
என் பார்வையில்...

✶ ✶ ✶



# ஓய்வறியா உழைப்பாளி

-திருமதி ஓசாநிதி சந்திரமேகன்
சித்தாண்டி.

மெய்யோ மெய்மறந்து தளர்ந்து போக
விழியோ கொவ்வைப் பழமாய்ச் சிவந்து போக
காலோ தடுமாறி பள்ளி அறையினுள் செல்ல
உணர்வற்று ஜடமாய் உடலோ அசர்ந்து
தன்னை அறியாது நிலை குலைந்து செல்ல
மீண்டும் அதே ஒப்பாரி திடுக்கிட்டு எழுந்து
திடமாய் மனதைச் செதுக்கி தன்பணியைச் செவ்வனே
செய்யப் புறப்பட்டாள் நம்வீட்டுக் குலப்பெண்

பறவைகள் பாட்டிசைக்கத் தொடங்க – தன்
பணியையும் ஆரம்பித்து ஒன்றன்பின் ஒன்றாக
தன் பணியைத் தொடங்கினாள் நம்குலப்பெண்
தன்தோள் தேய பாத்திரங்கள் பளபளக்க
லாவகரமாய் விளையாடுகிறாள்
ஆரோக்கியமாய் நாம் உண்ண அறுசுவையோ
மணம் வீச தன் சாமர்த்தியத்தை
அசாதாரணமாய்க் கையாண்டு
மூணுவேளை மட்டுமல்ல இடைத்தீனியையும்
தந்துதவுவாள் எங்கள் சமையற்காரி



அழுக்கு மூட்டைகள் கூடையை நிரப்ப
அது அவள் கண்ணில் அகப்பட
நொடிப்பொழுதிலே – அவள் கரத்தின்
வீராப்பால் அழுக்குகள் ஒழிந்து கொள்ள
வதனத்தில் புன்முறுவல் தவழக் கம்பீரப்பார்வை
ஆடையை நோக்க ஏளனமாய்ப் புன்னகைத்து
உள்நுழைகிறாள் எங்கள் சலவைத் தொழிலாளி

# ஓய்வறியா உழைப்பாளி



அலங்கோலமாய்த் தலைவிரித்திருந்த இல்லத்தை
அழகாய்ச் செதுக்கிவரும் விருந்தாளி
புன்முறுவலோடு உள்நுழைய அவள் கற்பனை
அதன் மீது விழ – இல்லமோ
மாளிகையாய் எண்ணி குதூகலிக்க
அதைக் கண்டு மனதுக்குள்
புன்னகைத்துக் கொள்கிறாள் – நம் வேலைக்காரி

பறவைகளின் பாட்டிற்கு ஆரம்பித்த பணி
கோயில் ஓசை கேட்டும் முடிவின்றி தொடர்ந்து செல்ல
அரைகுறை உணவால் தன் வயிற்றை நிரப்பி
திருப்தியால் தன்னவர் மகிழ்வோடு உண்பதைக் கண்ணுற்று
மீதிப் பசியை போக்கி மிஞ்சிய வேலையைத் தொடங்கி
கண் அசந்து உடல் தளர்ந்து தன்னையறியாது
பள்ளி செல்வாள் நம் ஓய்வறியா உழைப்பாளி!

* * *

# குறும்பாக்கள்

- அலைக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு.

சிரிப்பழகி செல்ல முத்து
சின்னருக்கு அவளிலொரு விருப்பு
கரிவண்ண முகமெனினும்
காதலால் அவளையன்று
வரித்தகணம் நிகழ்ந்ததங்கு 'வெட்டு.

◆◆◆

புத்தளத்தில் பொன்னருக்கொரு பிள்ளை
போகாததில் அவர்மனதில் கவலை
இத்தனை நாள்வரையும்
ஏறெடுத்து நோக்கவில்லை
சத்தமின்றி வெட்டிவிட்டாள் உறவை.

◆◆◆

கருத்தும் பிடிக்காததால் கடுப்பு
கதையாயதை எழுதியதால் கொதிப்பு
பெருத்த அறிவிருந்தும்
பின்புத்தி சீரில்லை
அருக்களிக்குதே உன்னிலரு வருப்பு.



◆◆◆

அப்பனுக்குத் தப்பவில்லைப் பிள்ளை
அடிதடியால் அனுதினமும் தொல்லை
தப்பாகிப் பிறந்ததென்று
தாய்க்குமுன் பலர்சொல்ல
வெப்பாகி எடுத்தாளவள் பொல்லை.

◆◆◆

# மாறாதவை

-வளர்கவி வாழையூர் அபி.



இருபத்தொரு ஆண்டுகள்
படிப்பு...படிப்பு... என்றே கழிகிறது வாழ்வு
வருமானத்திற்கு வரகளவும் வக்கில்லை..!
சந்தித்துப் பழகிய முகங்கள் சடுதியும்
ஞாபகங்களில் இல்லை..!
எனது தாய் ரிட்டையர்
தாயின் தகப்பனார் காலத்து வானொலிப்பெட்டி
நிரந்தரமற்றுக் காணொளியாகக் காட்சியளிக்கிறது..!
ஆங்கிலேயர் புண்ணியத்தில் பெருந்தெருக்கள்
மாறியுள்ளன – ஆனாலும்
அரசியலில் எத்தனையோ குழப்பங்கள்..!
குண்டுத் தாக்குதல் மறைந்து கொரோனாவெனும்
நோய்க் கிருமியும் நாளை விட்டு
மறையத் தொடங்கலாயிற்று..! – ஆயினும்
விஞ்ஞானம் தினந்தினம் வியப்பூட்டலைத்தான்
செய்கிறது..!
புதியபுதிய திரைப்படங்கள் அடிக்கடி வெளியாகுகி–
ன்றன
ஏராளமான பிரபலங்கள் இறந்துள்ளனர்..!
பல போர்களை உலகம் தாங்கிவிட்டது
போர்! போர்! என்ற அச்சம் அதிர்ந்தாலும்
அனைவருக்கும் அலுத்துப் போய்விட்டது..!
கடந்து செல்லும் நினைவுகள் மறந்து போகையில்
ஏனோ..?
தந்தையுடன் பேசாமலிருப்பது
இன்றுவரை மாறவில்லை.

# புத்தாண்டு

- ரவிகிருஷ்ணா
கிரான்குளம், மட்டக்களப்பு.

புத்தாண்டு என்கிறார்
புதிய கதை பேசுறார்
மத்தாப்பு கையெடுத்து
மதிமயங்கி நிற்கிறார்
எக்காலம் எதுவென்று
ஏளனமாய்ப் பேசுறார்
முடிந்தகதை முடிந்ததென்று
முசுப்பாத்தி பண்ணுகிறார்
பக்கமெல்லாம் படர்ந்துவந்து
பழைய கதை முடிக்கிறார்

சிட்டெனவே சிறகடித்து
சில நிமிடம் பறக்கிறார்
கண்டதெல்லாம் கையெடுத்து
கருணை மனு கேட்கிறார்
சடுதியிலே சறுக்கி நின்று
சண்டைப் பயிற்சி செய்கிறார்
தத்தித்தாவி தவழ்ந்து வந்து
தடயம் ஒன்று வைக்கிறார்
இத்தனையும் விட்டெறிந்து
இளைப்பாறுவம் என்கிறார்
மூட்டை முடிச்சு கட்டிக்கிட்டு
முடிந்த கதை பேசுறார்

அத்தனையும் சொர்க்கம் என்று
அப்படியே நிற்கிறார்
ஆசா பாசம் காட்டிக்கொண்டு
ஆலாபனை செய்கிறார்
இலக்கியங்கள் பேசுகின்ற
இனிய கதை சொல்கிறார்
ஈடிணையாய்க் கதைகள் பேசி
ஈர இதயம் தருகிறார்

உள்ளதெல்லாம் உருவம் என்று
உரக்கச் சொல்லி நிற்கிறார்
ஊரும் உலகும் பேசுகின்ற
ஊக வார்த்தை சொல்கிறார்
எண்ணமெல்லாம் கதை எழுதி
எப்பொழுதும் மகிழ்கிறார்
ஏணியதன் படியிலேயே
ஏனோ மயங்கி நிற்கிறார்
ஐயையோ என்று சொல்லி
ஐயப்பட்டு நிற்கிறார்
ஒன்று என்ற வார்த்தை விட்டு
ஒரு கணமாய் நிற்கிறார்
ஓதுகின்ற மொழியதாலே
ஓரஞாயம் சொல்கிறார்
ஔடதமாம் என்று கூறி
ஔவியங்கள் பேசுறார்.

# ஒரு வரிக் கவிதை

-தமிழ்மகள் சதுர்த்தி.



### மழை
ஆகாயத்திலிருந்து மண்ணை இணைக்கும் நூல்





### பள்ளிக்காலம்
ரசிக்கப்படும் வாழ்க்கையின் சில பக்கங்கள்

### மின்மினி
நடமாடும் வெளிச்சவீடு





### பட்டினி
பசியின் தேடலில் விடையில்லா வினா

### காதல்
அன்பான ஆயுட்காலம்





### அனுபவம்
நினைவில் அடங்கா புத்தகம்

### முத்தம்
உதடு எழுதும் கவி





### வரதட்சணை
நாகரிகமான பிச்சை

### மௌனம்
வசப்படுத்தப்படாத வார்த்தை





### வாழ்க்கை
இறுதிப் பக்க எண் அறியாது புரட்டும் புத்தகம்

# வாழ்க தமிழ்!



## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

-பாரதியார்.



கவிதை
புதுமையின்
வாழ்விடம்.
-காரிருளன்.

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்
பேத்தாழை

9773021668009
ISSN 3021-6680 Kavi Mulari Magazine